# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| மாவட்டம் : | மதுரை | காலம் : | 12/02/2022 | முதல் | 16/02/2022 |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | 012/ 2022 | வெளியீட்டு நாள் : | 11/02/2022 | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33° - 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 22° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (08.02.2022 முதல் 10.02.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 16-02-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08/02 | 09/02 | 10/02 | | தேதி | நாள்-1 12/02 | நாள்-2 13/02 | நாள்-3 14/02 | நாள்-4 15/02 | நாள்-5 16/02 |
| 0.0 | 0.0 | 0.0 | | மழை (மி.மீ) | 2 | 10 | 0 | 0 | 0 |
| 34 | 35 | 33 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 34 | 34 | 35 |
| 22 | 22 | 21 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 23 | 23 | 24 |
| 5 | 4 | 4 | | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 2 | 2 | 2 |
| 74 | 71 | 76 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 75 | 75 |
| 39 | 43 | 35 | | | 60 | 60 | 55 | 55 | 55 |
| 7 | 10 | 7 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 6 | 6 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | **காற்றின் திசை** | தென் கிழக்கு | தென் கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட மேற்கு |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் பிப்ரவரி 13 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33° -35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22° - 24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு, வடகிழக்கு மற்றும் வடமேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**கனமழை எச்சரிக்கை:**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் பிப்ரவரி 12 தேதி கனமழை எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இந்த தகாலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சி மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கும் படியும், விளை நிலங்களில் மழை நீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

## இடி மின்னல் எச்சரிக்கை:

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பிப்ரவரி 11 மற்றும் 12 தேதி இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளைமேற்கொள்ளவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

## முக்கிய பயிர்கள் : தென்னை, கொடி வகை காய்கறி பயிர்கள், கால்நடை

### தென்னை:

தென்னை விவசாயிகள் கவனத்திற்கு தற்போது ஆங்காங்கே தென்னை மரத்தில் இளம் குரும்பைகள் உதிரும் பிரச்சினை காணப்படுகிறது. இதனை தவிர்க்க வேர் மூலம் ஒரு மரத்திற்கு 200 மில்லி என்ற அளவில் தென்னை டானிக் கட்ட வேண்டும். 6 மாத இடைவெளியில் மீண்டும் கொடுத்து குரும்பை உதிர்வதை தடுக்கலாம்.

### கொடி வகை காய்கறி பயிர்கள்:

தற்போது நிலவும் பருவச் சூழ்நிலையில் கொடி வகை காய்கறி பயிர்களில் பெண் பூக்களை அதிகரிக்க எத்ரல் 100 பிபிஎம் அதவாது 10 லிட்டர் தண்ணீரில் 1 மில்லி கலந்து 15 நாட்கள் இடைவெளியில் நான்கு அல்லது ஐந்து முறை நிலத்தில் போதுமான ஈரம் இருக்கும் போது தெளிக்க வேண்டும்.

### கால்நடை:

தற்போது நிலவும் வானிலை மற்றும் மாட்டுகொட்டகையின் சுகாதாரமற்ற பராமரிப்பு காரணமாக, பசுவில் கடுமையான மடிஅழற்சி தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. கறவை மாடுகளில் காணப்படும் இம் மடிநோயை கட்டுப்படுத்த "தனுவாஸ் மாஸ்டி கார்ட்" மருந்தினை கொண்டு நாள் ஒன்றிர்க்கு இரு முறை பால் கறந்த பின் மடி மற்றும் காம்புகள் மீது தடவ வேண்டும்.